## தகைசால் தமிழர் – தோழர்
# நல்லகண்ணு அய்யா விரைந்து நலம்பெற விழைகிறேன்!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை, ஆக. 30 -

உடல் நலிவுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தகைசால் தமிழர் தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களது உடல்நலன் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உடல்நலிவுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தகைசால் தமிழர் தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களது உடல்நலன் குறித்து தோழர் முத்தரசன் அவர்களிடமும் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களிடமும் தொடர்ந்து நலன் விசாரித்து வருகிறேன்.**

**நல்லகண்ணு அய்யா அவர்கள் விரைந்து நலம் பெற விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.08.2025) சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடல் நலக்குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் நல்லகண்ணு அவர்களை நேரில் சந்தித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராமன் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள் இருந்தனர்.

## கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்
# அய்யா நல்லகண்ணுவுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள்!
## அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

சென்னை, ஆக. 30 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.08.2025) சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடல் நலக்குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் பெருமதிப்பிற்கினிய அய்யா நல்லகண்ணு அவர்களை நேரில் சந்தித்து, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் நல்லக்கண்ணுவின் உடல்நிலை குறித்து:

கம்யூனிஸ சித்தாந்தத்தின் முன்னோடி, முதுபெரும் தலைவரும், தன்னலம் கருதாது பொதுச் சேவையில் பெறும் உச்சமாக திகழ்ந்தவருமான பெருமதிப்பிற்குரிய அய்யா நல்லக்கண்ணு அவர்கள் கடந்த 22.08.2025 அன்று வீட்டில் தவறி விழுந்த காரணத்தினால் தலையிலும், கைவிரலிலும் சிறிய அளவிலான காயங்கள் ஏற்பட்டு, உடனடியாக அவர்களின் குடும்பத்தினர் தனியார் மருத்துவமனையில் அனுமதித்து, சிகிச்சை அளிக்கப்பட்டது. தனியார் மருத்துவமனை நிர்வாகம் உடனடியாக சி.டி.ஸ்கேன் எடுத்து அந்த பரிசோதனையில் தலையில் உள்காயம் ஏதும் இல்லை என்பதை உறுதிபடுத்தியிருந்தனர்.

இந்தநிலையில் 24.08.2025 அன்று மாலை அவர் உணவருந்தும்போது உணவுக்குழாயில் புரைஏறியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு, இரவு 10.30 மணிக்கு மேல்சிகிச்சை தேவைப்பட்ட நேரத்தில் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையின் முதல்வர் தலைமையிலான அனைத்து சிறப்பு மருத்துவர்களும் மிகுந்த கவனத்தோடு அவரது உடல்நிலையை தொடர்ச்சியாக கண்காணித்து வந்தனர். மருத்துவ குழுவின் பரிந்துரைப்படி அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது. உணவுப்பொருட்கள் சுவாசக்குழாயில் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு, Bronchoscopy மூலமாக உணவுத் துகள்கள் அகற்றப்பட்டது.

நோயின் தீவிர தன்மையை அறிந்து அவருக்கு Antibiotics மற்றும் பிற மருந்துகள் செலுத்தப்பட்டது. 48 மணி நேரத்தில் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டதால் 26.08.2025 அன்று செயற்கை சுவாசம் நிறுத்தப்பட்டது. உறவினர்களை அடையாளம் கண்டுக்கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டது.

இந்தநிலையில் நேற்று 27.08.2025 இரவு வாயில் Secretion தேங்கியதால் மீண்டும் அவருக்கு சுவாச பிரச்சனை ஏற்பட்டது.

எனவே, உடனடியாக அவருக்கு செயற்கை சுவாசம் கொடுக்கப்பட்டு, மேலும் மருத்துவ குழுவின் அறிவுரைப்படி, தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது அவர் தீவிர கண்காணிப்பில் உள்ளார், அவரது உடல்நிலை சீராக உள்ளது. இராஜிவ் காந்தி அரசு மருத்துவர்களுடன் அப்பல்லோ மருத்துவமனையின் மருத்துவர் மரு.ராஜ் பி. சிங், தொற்றுநோய் நிபுணர் மரு.பிரவீன் போன்றவர்கள் இன்று பிற்பகல் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மருத்துவர்களுடன் தோழர் நல்லக்கண்ணு அவர்களை பரிசோதிக்க உள்ளனர்.

இவ்வாறு அனைத்து முயற்சிகளையும் மருத்துவமனை நிர்வாகம் செய்து வருகின்றது. பொதுமக்களும் அரசியல் இயக்கங்களை சேர்ந்த முன்னோடிகளுக்கும் ஒரு வேண்டுகோள் 101 வயதை கடந்தவர், விடுதலை போராட்ட வீரர், மிகப்பெரிய தலைவரான தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு இப்போது தேவையே தீவிர சிகிச்சையும் தனிமையும் பாதுகாப்பும்தான். இவரது உடல்நிலை குறித்து விவரம் தெரிந்து கொள்ள மருத்துவமனையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் உடல்நிலை குறித்து விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம். தேவையில்லாமல் அவரை நேரில் சந்திப்பதை தவிர்க்க வேண்டும்.

### மூளைக்காய்ச்சல் குறித்தான கேள்விக்கு

கேரளாவில் 18 பேர் மூளை தின்னும் அமீபா நோய் பாதிப்பிற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக இன்று சொல்லப்பட்டுள்ளது. கடந்த 1 வாரகாலமாகவே இந்த நோயின் தன்மை கூடியிருக்கிறது. நோய் பாதிப்பிற்கான காரணங்களை மருத்துவ வல்லுநர்களிடம் கேட்கும் போது, அசுத்தமான நீர், மாசுபட்ட நீர் நிரம்பிய குளம், குட்டைகள், நீர்நிலைகளில் தேங்கிய சேறுகளில் தான் அமீபா உருவாகுகிறதாக சொல்லப்படுகிறது. அத்தகைய குளம், குட்டைகளில் குளிக்கும்போது மூக்கின் வழியே அமீபா சென்று மூளையை பாதித்து, மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்கிறது. இது தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை. அசுத்தமான குளம் குட்டைகளில் குளித்ததால்தான் நேக்லேரியா ஃபோவ்லேரி (Naegeleria Fowleri) என்ற அமீபா ஏற்பட்டு, அரிதான மூளை காய்ச்சல் நோயான, முதன்மை அமீபிக் மெனிங் என்சஃபலிட்டிஸ் (Primary Amoebic MeningoEncephalitis (PAM) நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

இந்த நோய் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு கடுமையான தலைவலி, காய்ச்சல், வாந்தி, மன குழப்ப நிலை, கழுத்து வலி, மயக்கங்கள் போன்ற பாதிப்புகள் ஏற்படுகிறது. கேரள மாநில சுகாதாரத்துறை நோய் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகளை வழங்கி நோய் பாதிப்பிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் குளம் மற்றும் குட்டைகள், பராமரிப்பு இல்லாத நீச்சள் குளங்களில் குளிப்பதை தவிர்த்துகொள்வது நல்லது.

### தெருநாய்க்கடி தொடர்பான கேள்விக்கு

தெருநாய்கள் பிரச்சனை தொடர்பாக உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் கருத்துகள் மாறுபட்டு உள்ளது. தெருநாய்களுக்கு கருத்தடை செய்து அதனை பிடித்த பகுதிகளில் விட்டுவிடுவது மட்டுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெருநாய்கடி சம்பவங்கள் குறித்து விவாதிப்பதற்காக பல்வேறு துறைகள் ஒருங்கிணைத்து கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். அதில் தெருநாய்கள் பராமரிப்பதற்காக குடில்கள் அமைக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு வட்டார அரசு மருத்துவமனை, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே மருந்துகள் வழங்கப்பட்டு வந்தது.

இந்த அரசு அமைந்த பிறகு தான் தமிழ்நாட்டு மருத்துவத்துறை வரலாற்றில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்பற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்கடிக்கு ARV மருந்துகள், பாம்புக்கடிக்கு ASV மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராமன் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

## விழுப்புரம் மத்திய மாவட்டப் பொருளாளர்
# ஜனகராஜ் தந்தை இராஜாமணி மறைவு!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 30-

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொருளாளர் ஜனகராஜின் தந்தை இராஜாமணி அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொருளாளர் ஜனகராஜ் அவர்களின் தந்தையார் இராஜாமணி அவர்கள் மறைந்த செய்தியால் வேதனையடைந்தேன்.

உணர்வூட்டி வளர்த்த அன்புத் தந்தையினை இழந்து தவிக்கும் ஜனகராஜ் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நான் முதல்வன் உயர்வுக்கு படிவழிகாட்டுதல் நிகழ்ச்சியைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்து உயர்கல்வி படிப்பதற்கான மாணவர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், திறன் மேம்பாட்டு உதவி இயக்குனர் சிவ நடராஜன், ரங்க பூபதி கல்வி குழும செயலர் ஸ்ரீபதி ஆகியோர் உள்ளனர்.

## மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர்
# கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் இல்ல மணவிழா!
## அமைச்சர் ஆர்.காந்தி – தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. கவிஞர்.காசி முத்து மாணிக்கம் வாழ்த்து!

கிருஷ்ணகிரி, ஆக. 30 -

கிருஷ்ணகிரி மாவட்டம் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் பி.டி. அன்பரசன் எ. மேகவா ஆகியோரின் மகன் ஏ.எம். உதயராஜ்க்கும், கிருஷ்ணகிரி மாவட்டம் மலத்தம்பட்டி எம்.மணிவேல் எம். சுலோச்சனா ஆகியோரின் மகள் எம். பவித்ராவிற்கும் கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ தேவராஜ் மஹாலில் திருமணம் நடைபெற்றது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர். காசி முத்து மாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திருமண விழாவில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் சுகவனம் , பாராளுமன்ற உறுப்பினர் கோபிநாத்,

மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், ஓசூர் மாநகர மேயர் சத்யா ,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன் ,அரியப்பன் , மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.வி.எஸ் சீனிவாசன், மாநில மகளிர் மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி , தொமுசா கிருஷ்ணன் ,

மாநில கலை, இலக்கிய , பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு விஜயகுமார், துணை.மேயர் ஆனந்தய்யா, கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட நிர்வாகிகள் கோவிந்தசாமி. சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், கதிரவன், செந்தில் கிருபாகரன். பரிதா நவாப், பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், யுவராஜ், சின்னசாமி, புஷ்பா சர்வேஸ், சுகு மாரன், வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரிஷ், ஜெயராமன், சீனிவாசன், அப்துல்கலாம், தனலட்சுமி, அருணா பூசன்குமார், கிருஷ்ணகிரி நகரக் கழக பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி , முன்னாள் நகர கழக செயலாளர் நவாப் , பேரூராட்சி தலைவர்கள் அம்சவேணி செந்தில்குமார், தம்பிதுரை, அமானுல்லா , சந்தோஷ் குமார் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்த மூர்த்தி , அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குண. வசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், ரகுநாத்,

கருணாகரன், பாக்யராஜ், நாகேஷ், சின்ராஜ், கஜேந்திரமூர்த்தி , திவாகர், சீனிவாச ரெட்டி, பேரூர் கழக செயலாளர் , வெங்கடப்பன், தஸ்தகீர் , பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வட்ட, வார்டு , கிளை கழக செயலாளர் BLA2,BLC தோழர்கள் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் திருமணத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை –
# கருஞ்சட்டை விருதுகள் : அமைச்சர் கோவி.செழியன் வழங்கி சிறப்புரை!
## பேரா.சுப.வீரபாண்டியன் நோக்கவுரை! கவிஞர் சல்மா எம்.பி. வாழ்த்துரை!

சென்னை, ஆக. 30 -

திராவிட இயக்கத் தமிழர் பேரவை கருஞ்சட்டை விருது வழங்கும் விழா - (நான்காம் ஆண்டு) இன்று (30.8.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை அண்ணா சாலை பாவாணர் நூலகக் கட்டிடத்தில் (எம்.எல்.ஏ. பில்டிங்) நடைபெறுகிறது.

இவ்விழாவில் சிற்பி செல்வராசு வரவேற்புரை யாற்றுகிறார்.

பொள்ளாச்சி உமாபதி, ஆ.சிங்கராயர், பெல்ராஜன், லாரன்ஸ், இரா.உமா, கா.சு.நாகராஜன், இராம. வைரமுத்து ஷேக் தாவுத், ப.எட்வின், மு.மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.வேடசந்தூர் ரவி தொகுப்புரையும் இளமாறன் நன்றியுரையும் ஆற்றுகின்றனர்.

இவ்விழாவிற்கு செல்வின் சௌந்தரராஜன் தலைமை வகிக்கிறார்.

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் நோக்க வுரை யாற்றுகிறார்.

கருஞ்சட்டை விருதுகளை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா வாழ்த்துரை வழங்குகிறார்.ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை பாராட்டுரை வழங்குகிறார். இவ்விழா வில் திராவிடர் கழகம் காப்பாளர் நெல்லை இரா.காசி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் அமைப்புச் செயலாளர் வெ.ஆறுச்சாமி, திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்தையா குமரன் ஆகியோர் கருஞ்சட்டை விருது பெறுகின்றனர்.

## செஞ்சி ஒன்றியம் – ஆலம்பூண்டியில்
# ‘நான் முதல்வன் - உயர்வுக்குப் படி’ - வழிகாட்டுதல் நிகழ்ச்சி!
## முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக 30-

நான் முதல்வன் உயர்வுக்கு படி வழிகாட்டுதல் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து இந்தியாவில் உயர் கல்வியில் தமிழ்நாடு முதன்மை பெற்றுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் நான் முதல்வன் உயர்வுக்குப்படி வழிகாட்டுதல் நிகழ்ச்சி செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி ரங்க பூபதி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ரங்க பூபதி கல்வி குழும செயலர் ஸ்ரீபதி ஆகியோர்முன்னிலை வகித்தனர். விழுப்புரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் அனைவரையும் வரவேற்றார்.நான் முதல்வன் திட்டம் மற்றும் திறன் பயிற்சி மாவட்ட உதவி இயக்குனர் சிவ நடராஜன் திட்ட விளக்க உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி உயர்கல்வி படிக்கும் மாணவ மாணவிகளுக்கு நான் முதல்வன் திட்டம் உயர்வுக்கு படி நிகழ்ச்சியில் கல்லூரியில் சேர்க்கை தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குசிந்தனையுடன் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கல்வியில் பெண்கள் உயர வேண்டும் என்ற வகையில் நான் முதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்து படிக்கின்ற மாணவ-மாணவிகள் அனைவரும் அனைத்து நிலையிலும் முதன்மை பெற வேண்டும் என்ற வகையில் உயவுக்கு படி வழிகாட்டுதல் நிகழ்ச்சியை நடத்துவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழ் சமுதாயத்தை கல்வியின் மூலம் உயர்த்த வேண்டும் என்பதற்காக நீட் தேர்வு மூலம் உள்ள பல்வேறு இடர்பாடுகள்இருந்தாலும் அதைதூக்கி எறிந்து விட்டு நான் இருக்கிறேன் என்று கூறி இன்றைக்கு கல்லூரி கனவு திட்டத்தை கொண்டு வந்து செயல்படுத்தி வரும் முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்ன் திட்டம், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் போன்ற கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து கல்வியில் இடையில் நின்ற மாணவர்களை கட்டறிந்து அவர்களும் தொடர்ந்து கல்வி பெற செய்துகல்விக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பதால் தான் இந்தியாவில் சராசரி கல்வி விகிதத்தில் தமிழ்நாடு 50 விழுக்காடு பெற்றுள்ளது.

அந்த வகையில் இந்தியாவில் உயர்கல்வியில் தமிழ்நாடு முதன்மை பெற்ற வருகிறது.தற்போது மேல்நிலைக் கல்வி முடித்துள்ள மாணவ - மாணவிகள் நான் முதல்வன் உயர்வுக்குப்படி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மூலம் மாணவர்களாகிய நீங்கள் எதிர் காலத்திற்கு தேவையான கல்வியை தேர்ந்தெடுத்து படித்து கல்வியிலும் பொருளாதாரத்திலும்உயர்ந்த இடத்திற்கு வர வேண்டுமென முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து செஞ்சி, திண்டிவனம் அரசு கலைக் கல்லூரி மற்றும் அரசு தொழில்நுட்ப கல்லூரி உள்ளிட்ட தனியார் கல்லூரிகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த உயர்கல்வி படிக்கும் வழிகாட்டுதல் அரங்குகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டார்.

செஞ்சி, மேல்மலையனூர், வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த 26 மேல்நிலைப்பள்ளியிலிருந்து சுமார் 397 க்கும்மேற்பட்ட மாணவ - மாணவிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன்,மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பெருமாள், திண்டிவனம் கல்வி மாவட்ட பள்ளிகள் ஆய்வாளர் விநாயகமூர்த்தி, வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், தலைமை ஆசிரியர்கள், ரங்க பூபதிகல்லூரி முதல்வர்கள்,கல்லூரி பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திண்டிவனம் மாவட்ட கல்வி அலுவலர் சிவசுப்பிரமணியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.